குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# அழகான ராணி எஸ்தர்

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Janie Forest
Alastair Paterson

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2022 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

ஒரு காலத்தில் எஸ்தர் என்ற பெயர் கொண்ட அழகான பெண் ஒருவள் இருந்தாள். அவளுடைய தந்தையும், தாயும் இறந்த பின்னர், எஸ்தரின் உறவினனான மொர்தேகாய் அவளை வளர்த்து வந்தான். ஒரு நல்ல மகளாக அவன் சொல்வதையெல்லாம் கேட்டு கீழ்ப்படிந்து அவனை கனப்படுத்தினாள்.





எஸ்தர் பெர்சியாவிலே வாழ்ந்து வந்தாள். ஆனால், எஸ்தர் பெர்சியா தேசத்தவளல்ல, அவள் ஒரு யூதப் பெண்மணி. அவளுடைய முன்னோர்கள் போரில் பிடிக்கப்பட்ட சிறைக்கைதிகளாய் பெர்சியாவுக்கு வந்தனர். எஸ்தரின் நாட்களில், பெர்சியாவிலே அனேக யூதர்கள் வாழ்ந்தனர்.

பெர்சியாவின் ராஜா உலகனைத்திலும் உள்ள தன்னுடைய இளவரசர்களுக்கு ஒரு பெரிய விருந்து பண்ணினான். ஆண்கள் ஒரு புறம் விருந்துண்ண, வஸ்தி ராணியுடன் பெண்களும் விருந்து பண்ணினார்கள்.



குடிபோதையில் இருந்த ராஜா வஸ்தி ராணியை ராஜமகுடம் அணிந்து அவளுடைய அழகை வெளிப்படுத்தச் சொன்னான். ஆனால் வஸ்தி ராணியோ மறுத்துவிட்டாள்.



பெண்கள் தங்களுடைய கணவன்மார்களை கனப்படுத்த வேண்டுமென்பதை வெளிப்படுத்த, ராஜா உண்டாக்கிய கட்டளையால் வஸ்தி ராணியினுடைய கிரீடம் எடுக்கப்பட்டுவிட்டது. அவள் ராணியாக இனி இருக்கமுடியாது.



புதிய ராணியை
கண்டுபிடிக்க
தேடுதல் வேலை
ஆரம்பமானது.
ராஜ்ஜியத்திலிருந்த எல்லா
அழகான பெண்களிலும்,
ராஜா எஸ்தரை தன்
மனைவியாக தேர்வு
செய்தான். அவளுடைய
தலையின் மேல் கிரீடத்தை
வைத்தான். எஸ்தர் தான்
ஒரு யூத பெண் என்று
சொல்லவில்லை ஏனெனில்
அப்படிச்சொல்லக்கூடாது
என்று அவளுடைய
உறவினனான
மொர்தேகாய்
சொல்லியிருந்தான்.





எஸ்தரைப் பற்றியதான செய்திகளை அறிந்துகொள்ள உறவினனான மொர்தேகாய் அரன்மனையின் வாயிலில் தன்னுடைய நேரத்தை செலவிட்டான். ஒரு நாள் அரண்மனையின் இரண்டு வேலைக்காரர்கள் ராஜாவை கொலை செய்ய திட்டமிடுவதை ஒட்டுக்கேட்டான்.



மொர்தேகாய் அனுப்பிய எச்சரிப்பினால் ராஜாவினுடைய வாழ்க்கை பாதுகாக்கப்பட்டது. அந்த வேலைக்காரர்கள் தூக்கிலிடப்பட்டார்கள். மற்றும் மொர்தேகாயின் பெயர் ராஜாவின் நடபடிகள் புஷ்தகத்தில் எழுதப்பட்டது.

ராஜாவுக்கு அடுத்தப்படியாக இரண்டாவது ஸ்தானத்தில் அதிகாரம் பெற்ற ஆமான் ஒரு பணக்காரன். ஆமான் கடந்துபோகிறபோது, ஒரு மனிதனைத் தவிர எல்லோரும் வணங்கினார்கள். ஆனால், யூதனாகிய மொர்தேகாய் ஜீவனுள்ள தேவனை மாத்திரம் வணங்கினான்.



ஆமான் எவ்வளவாக மொர்தேகாயை வெறுத்தானென்றால் அவனையும், பெர்சியாவிலுள்ள யூதர்கள் அனைவரையும் கொன்று போட தீர்மானித்தான். எவ்வளவு பயங்கரமானது! துஷ்டனான ஆமான் தந்திரமாக ராஜாவை ஒரு சட்டத்தில் கையொப்பமிடச்செய்து ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ராஜ்ஜியத்திலுள்ள எல்லா யூதர்களையும் கொலை செய்ய வழிசெய்தான்.





அது ஒரு
பொல்லாத சட்டம்.
யூதர்களும், பெர்சியர்களும்
துயரங்கொண்டாடினார்கள்.
ஆனால் நினைவுகூற
வேண்டியது - தேவன்
எஸ்தரை ராணியாக
உருவாக்கியிருக்கிறார்.
அவள் ஒரு யூத
பெண்மணி.



தன்னுடைய
அடையாளத்தை
ராஜாவினிடத்திலிருந்து
மறைப்பாளா? அல்லது
சாவுக்கு துணிந்து
முயற்சி செய்து
தன்னுடைய
ஜனங்களை
காப்பாற்றுவாளா.

தேவன் எஸ்தருக்கு ஒரு புத்தியுள்ள யோசனையை கொடுத்தார். ராஜாவையும், ஆமானையும் அவள் ஒரு விருந்துக்கு அழைத்தாள். அங்கே ராஜா அவள் என்ன கேட்டாலும் கொடுப்பதற்கு சம்மதித்தான். "ராஜாவும், ஆமானும் நாளைக்கு ...விருந்துக்கு வரட்டும்," என்று எஸ்தர் பதில் சொன்னாள். அப்போது தன் வேண்டுதலைச் சொல்லுவாள்.



இதற்கிடையில், ஆமான்
மொர்தேகாயை
தூக்கிலிட ஒரு பெரிய
தூக்கு மரத்தை
செய்திருந்தான்.



அந்த இரவு ராஜாவுக்கு
தூக்கம் வரவில்லை. ராஜாவின்
நடபடிகள் புஸ்தகத்தை வாசிக்க
கேட்டபோது மொர்தேகாய்,
ராஜாவின் வாழ்க்கையை
காப்பாற்றியதற்காக
வெகுமானம் ஒன்றும்
கொடுக்கப்படவில்லை



என்று
அறிந்துகொண்டான்.

அடுத்த நாள் காலையில், ராஜா ஆமானிடம் கேட்டான், "ராஜா கனப்படுத்த விரும்புகிற மனுஷனுக்கு என்ன செய்ய வேண்டும்?" ஆமான் மிகுந்த சந்தோஷப்பட்டான். அவன் ராஜா என்னைப்பற்றிதான் நினைக்கிறார் என்று நினைத்தான்.



ஆமான் மொர்தேகாயை
தூக்கிலிட உத்தரவு கேட்கும்படி
ராஜாவினிடத்தில் வந்திருந்தான்.
தூக்குமரம் ஏற்கெனவே
தயாராகயிருந்தது. இப்போது
அது கொஞ்சம் காத்திருக்கலாம்.



மிக உற்சாகமாக, ஆமான் தன்னுடைய பரிந்துரைகளை சொன்னான். "அந்த மனிதனை ராஜாவின் வஸ்திரங்களினாலும், கிரீடத்தினாலும் அலங்கரிக்கவேண்டும்."



"ராஜாவின் குதிரையில் அவனை அமர்த்தவேண்டும் எல்லோரும் காணும்படியாக ஒரு ராஜ குல இளவரசன் அவனை பட்டணத்தின் வழியாக நடத்திச்செல்ல வேண்டும்." "வேகமாய் போய், யூதனாகிய மொர்தேகாயிக்கு அப்படிச்செய்," என்று ராஜா ஆமானுக்கு கட்டளையிட்டான்.




ஆமான் மொர்தேகாயை பட்டணத்தின்
வழியாக நடத்திச்செல்லும் போது
அவன் எப்படி உணர்ந்திருப்பான்
என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
முன்பிலும் அதிகமாக அவன்
மொர்தேகாயை
வெறுத்தான்.

"சற்று பொறுத்திருங்கள்,"
ஆமான் யோசித்திருக்கலாம்,
"மற்ற எல்லா யூதர்களுடன் -
அவனும் சீக்கிரமாக
மரித்துப்போவான்."



அந்த நாளின் பின் வேளையிலே, ஆமானும் ராஜாவும் எஸ்தர் ராணியின் விருந்துக்கு வந்து சேர்ந்தார்கள். "உன்னுடைய விண்ணப்பம் என்ன?" என்று ராஜா கேட்டார். அவன் தன்னுடைய வாக்குறுதியை மறந்து போகவில்லை. ஆமானின் எல்லா தந்திரமான சதிதிட்டங்களையும் எஸ்தர் ராணி ராஜாவினிடத்தில் சொன்னாள். "அவனை தூக்கிலிடுங்கள்!" என்று ராஜா சொன்னான்.





யூதர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ளும்படி ராஜா மற்றொரு கட்டளையை பின்பு பிறப்பித்தான். அவர்கள் எல்லோரும் காப்பாற்றப்பட்டார்கள்!



மொர்தேகாய் ராஜாவுக்கு அடுத்தபடியாக
இரண்டாவது ஸ்தானத்தில் அமர்த்தப்பட்டான்
மற்றும் யூதர்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர்
வெகுமதி கொடுத்து மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.
இன்னும் கூட யூத ஜனங்கள் அழகான எஸ்தர்
ராணியின் மூலம் எப்படிக் காப்பாற்றப்பட்டார்கள்
என்பதை நினைவு
கூறுகிறார்கள்.



# அழகான ராணி எஸ்தர்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

எஸ்தர்

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16